DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 66/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **லட்சுமணன்** (P.w. 9) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of November 2025

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மேலகண்டமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். ஆஜர் எதிரிகளையும் தெரியும், அசா1 ஆறுமுகத்தை தெரியும். மேற்படி கையொப்பத்தை கொரோனா காலகட்டத்தில் செய்தேன். வருடம், தேதி, மாதம் ஞாபகமில்லை. சம்பவ தினத்தன்று நான் வேலைக்கு சென்றுவிட்டேன். எதிரிகள் வீடும் அசா1 வீடும் எனது வீடும் ஒரே தெருவில்தான் உள்ளது. மறுநாள் போலிசார் சம்பவ இடத்தில் இருந்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், நான் கையொப்பம் செய்தேன். **(அந்த பார்வைமகஜரில் உள்ள 1வது**

**கையொப்பம் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 03.09.2020ம் தேதியன்று காலை சுமார் 11.00மணிக்கு நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த கிருஷ்ணகுமாரும் எங்கள் ஊர் மெயின் தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருச்சுழி காவல் நிலைய குற்ற எண்.261/2020 வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நானும் கிருஷ்ணகுமாரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.